**தலைப்பு 281 – கமநல அபிவிருத்தி திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) வருடாந்த நிதிக்கூற்றுக்கள் | | |
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது 01 மாத தாமதத்தின் பின்னர் 2019 ஏப்ரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள | | |

| | | |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 28101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது 03 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2019 மே 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

**1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்திற்குச் சொந்தமான 553 கமநல சேவை நிலையங்கள் மற்றும் 05 இயந்திரப் பிரிவுகள், திணைக்களத்திற்கான 25 மாவட்ட அலுவலகங்கள், தலைமை அலுவலகம் என்பவைகளின் காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 35 கமநல சேவை நிலையங்களின் காணிகள் 2013 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அப்பெறுமதி நிதிநிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாத அனைத்து சொத்துக்களினதும் மதிப்பீட்டுப் பெறுமதி 2019 ஆம் ஆண்டின் போது CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கிறேன். |
| (ஆ) திணைக்களத்திற்குச் சொந்தமான 553 கமநல சேவை நிலையங்கள் மற்றும் 05 இயந்திரம் பிரிவுகளின் கட்டிடங்கள், தலைமை அலுவலகத்தின் 03 கட்டிடங்கள், புத்தளம் | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்களத்திற்குச் சொந்தமான 25 மாவட்ட அலுவலகங்களின் கீழுள்ள 553 கமநல சேவை நிலையங்களுக்கு மத்தியில் 152 கமநல சேவை நிலையங்களுக்குரிய |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்ட அலுவலகத்திலுள்ள பசளைக் களஞ்சியத்தின் கட்டிடங்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | கட்டிடங்களின் பெறுமதிகள் 2019 ஆம் ஆண்டின் போது CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். மேலும் மிகுதியான அனைத்து கட்டிடங்களும் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது வரை மதிப்பீட்டுப் பெறுமதிகள் கிடைத்திருக்கவில்லை. |
| (இ) | இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி மாவட்ட அலுவலகங்களின் கட்டிடங்களினதும் நிர்மாணங்களினதும் பூர்த்தியடையாத வேலைகளின் பெறுமதியான ரூபா 10,960,648 தொகை ஆண்டின் போது கொள்வனவாக பதிவு செய்யப்பட்டதன் காரணமாக நிதிச்சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் பெறுமதி அதிகரித்தும் பூர்த்தியடையாத வேலைகளின் பெறுமதி அத்தொகையால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும | இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தின் ரூபா 7,008,726 தொகையான கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் பெறுமதி 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட்ட கொடுப்பனவாக இருந்ததனால் அப் பெறுமதி ஆண்டின் போது கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களை கொள்வனவு செய்தல்களை கையேற்றல்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. மேலும் ரூபா 3,951,922 தொகையான கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் முடிவுறுத்தப்படாத கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் பெறுமதி முடிவுறுத்தப்படாத வேலைகளின் கீழ் சொத்துக்கள் பதிவேட்டின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது ரூபா 7.9 மில்லியன் பெறுமதியான 04 வாகனங்கள் ஏலத்தில் விற்கப்பட்டிருந்த போதிலும் அப் பெறுமதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அந்த 04 வாகனங்களின் பெறுமதி 2019 சனவரி மாதத்தில் பொழிப்பாக CIGAS இன் மூலம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிருந்து அகற்றப்பட்டுள்ளது. |

**1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் வருமான மற்ற பெறுவனவுகளாக ரூபா 10,061,312,829 காட்டப்பட்டிருந்தும் திறைசேரியிடமிருந்து பெற்ற கட்டு நிதி வைப்பு பெறுவனவுகள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் ரூபா 10,780,245,891 ஆக இருந்தது. அதற்கிணங்க ரூபா 718,933,062 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் தனிப்பட்ட வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள், நிவாரணங்கள் மற்றும் மாற்றல்கள், பௌதீக சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளைப் பெற்றுக்கொளளல் என்பவற்றின் கீழ் ரூபா 10,160,120,306 தொகை காட்டப்பட்டிருந்தும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 10,130,218,625 ஆக இருந்தது. அதற்கிணங்க காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 29,901,681 குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | - மேற்கூறியவாறு - | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தோன்றிய தேறிய காசுப்பாய்ச்சல்களில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த முற்பணப் பெறுவனவுகள் ரூபா 279,526,261 தொகையும் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 326,341,393 தொகையும் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்கூறியவாறு - | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் போது திணைக்களம் நிதிச் செயற்பாடுகளில் ஈடுபடாதிருந்த போதிலும் நிதி செயற்பாடுகளின் கீழ் உள்ள தேறிய காசுப் பாய்ச்சலில் வைப்புக் கணக்கின் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் கொடுப்பனவுகளாக ரூபா 905,304,674 காட்டப்பட்டிருந்தது. | - மேற்கூறியவாறு - | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (உ) | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளாக ரூபா 400,395 காட்டப்பட்டிருந்தும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் இறுதியில் காசு மீதி இல்லை என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

### 1.6.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| **அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தினால் நிதிப் பிரமாணம் 272(2) இன் பிரகாரம் நடவடிக்கை பூர்த்தி செய்யப்படாது 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 13,085,959 பெறுமதியான 110 கொடுப்பனவு வவுச்சர்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 272(1) மற்றும் 1993 யூலை 21 ஆந் திகதிய 320 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

**1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் செய்யப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்தல் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை தேவையான வேளையில் தயாரித்தல் இடம் பெறுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுபடுத்த வேண்டியிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களுக்கான ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கவனித்துக்கொள்ள வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் காரணமாக தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவைப்படுகின்ற வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில்கள் வழங்குதல் இடம்பெறுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுபடுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - |

### 1.6.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நியமிக்கப்பட்ட ஏற்பாடுகள் | | | |
| | 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 31 ஆம் பிரிவு | தூண்களை ஆதாரமாகக் கொண்டு வீட்டினை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்திற்குப் பதிலாக 10 பேச்சர்ஸ்களுக்கு மேற்பட்ட அளவுள்ள 03 கடைகளை நிர்மாணித்தலும் தாழ்ந்த பகுதிக்கு மண் நிரப்பி வாகனங்கள் நிறுத்தி வைத்தலும் இடம்பெற்றிருந்தும் அது தொடர்பாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | அரசாங்க நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 1647 | வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் வாகனங்களின் விபரங்களை உள்ளடக்கிய மோட்டார் வாகனப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | | | |
| | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 2009/09 ஆம் இலக்க | திணைக்களத்தின் 561 கமநல சேவை நிலையங்கள் மற்றும் விவசாய வங்கிகளில் | அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் சேவைக்கு வருகைதரல் மற்றும் வெளிச் செல்லலைப் பதிவு செய்வதற்கு கைவிரல் அடையாளமிடும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 10 மூலதன செலவு விடயங்களுக்காக அதிக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததன். காரணமாக அந்த நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 17 சதவீதத்திலிருந்து 85 சதவீதம் வரையான வீச்சுடைய அளவில் இருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொதுத் திறைசேரியால் பணம் விடுவிக்கப்படுதலானது செலவு விடயங்களின் அடிப்படையிலின்றி மூலதனம் மீண்டுவருபவை, சம்பளங்கள், முற்பணங்கள் கணக்கு ஆகிய தலைப்புக்களின் கீழாகும். எனவே மேற்கூறிய தேவைப்பாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் திணைக்களத்தால் கட்டுநிதிகள் வேண்டப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அனுராதபுர மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான 18 கமநல சேவை நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 7,995,849 மொத்த தொகை ஆண்டிற்கான பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கடப்பாடுகளும் பொறுப்புக்களும் முறையாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். | நிலையங்களுக்குச் செலுத்த வேண்டிய பணங்களில் அதிகமானவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மேலும் செலுத்த வேண்டிய பணம் தொடர்பான விபரமான பதிலை வழங்குவதற்கு சில காலம் எடுப்பதனால் அதற்காக 14 நாட்கள் கால எல்லையை வழங்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறேன். |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே களுத்துறை மற்றும் மாத்தறை மாவட்ட அலுவலகங்களுக்கு சேதனப் பசளை உற்பத்தியை மேம்படுத்துவதற்காக சாரலங்கா கடன் திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 400,000 மொத்த தொகையான நிதி ஏற்பாடு உரிய செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விசேட செயற்திட்டத்திற்காக கிடைக்கின்ற பணத்தை உரிய நிதி ஆண்டின் போது ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இப்பணம் 2019 ஆம் ஆண்டின் போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. |
| (ஆ) சேதனப் பசளை உற்பத்திக்காக 03 கமநல சேவை நிலையங்களின் மூலம் மூன்று விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 900,000 மொத்த தொகையான கடன் பணம் அச் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படவில்லை. | விசேட செயற்திட்டத்திற்காக கிடைக்கின்ற பணத்தை ஈடுபடுத்துவது தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களால் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். | கடன் தவணைப் பணம் நிர்ணயிக்கப்பட்டவாறு செலுத்தப்படுவதுடன் குறுகிய காலத்தில் உரிய கடனாளிக்கு தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது. |
| (இ) கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதாரம் தொடர்பான அமைச்சின் நீர் உயிரின வளர்ப்பை உருவாக்கும் செயற்திட்டத்தின் கீழ் கம்பன்பில குளத்தின் அபிவிருத்திக்காக ரூபா 3,673,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் செயற்பாடு பூர்த்தி செய்யப்படாதிருக்கையில் பிரதேச பொறியியலாளரால் அக்கொடுப்பனவுகள் சான்றுபடுத்தப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018.12.29 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2018.12.31 ஆந் திகதி பிரதேச பொறியியலாளரால் உரிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் உரிய கொடுப்பனவு மாவட்டத்திற்குப் பொறுப்பான உதவி ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது வரை ஒப்பந்தக்காரரால் செய்யப்பட்ட வேலைகளுக்கு பணம் கொடுப்பனவு செய்வதற்கு நிதி ஏற்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | | | கிடைத்திருக்கவில்லை. |
| (ஈ) | விவசாய அமைச்சினால் பாணந்துறை உணவகத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,579,332 தொகையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2018 திசெம்பர் மாதத்தின் போது நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 2019 மே 24 ஆந் திகதி வரை உணவகத்திற்கு நுழைவதற்கான படிக்கட்டுக்கள் நிர்மாணிக்கப்படாததன் காரணமாக அதனைப் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாது விளைவற்றுக் காணப்பட்டன. | விசேட செயற்திட்டத்திற்காக கிடைக்கின்ற பணத்தை ஈடுபடுத்துவது தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களால் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

**2.4 செயல்நிமித்த உபகட்டுநிதிகளை வழங்குதலும் தீர்த்துவைத்தல்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371(6) இன் பிரகாரம் வழங்கப்படுகின்ற செயல் நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட்ட ஆண்டின் இறுதித் திகதிக்கு முன்னர் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணக்கமின்றி 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 228,125 மொத்த தொகையான செயல் நிமித்த கட்டு நிதிகள் 2018 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்படாது 2019 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டின் போது 04 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 180,000 தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதிகள் 2019 பெப்ரவரி 14 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதியிலிருந்து செயற்பாடுகளைப் பூர்த்தி செய்து 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டி இருந்தும் மீளாய்வாண்டில் 30 உத்தியோகத்தர்களுக்கு 275 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 5,601,944 மொத்த தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி 31 நாட்களிலிருந்து 352 நாட்கள் வரையான வீச்சுடைய காலம் தாமதித்து தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

**2.5 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இலங்கை முதலீட்டுச் சபையால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட முறையே ரூபா 184,432 மற்றும் ரூபா 5,958,319 தொகைகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஏனைய நிறுவனங்களிலிருந்து பல்வேறு செயற்பாடுகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தை உரிய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2016 யூலை 01 ஆந் திகதி வக்கல்மோதர கடல் நீரை கட்டுப்படுத்தும் செயற்திட்டத்திற்காகக் கிடைத்த ரூபா 226,551 தொகை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது பொது வைப்புக் கணக்கில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஏனைய நிறுவனங்களிலிருந்து பல்வேறு செயற்பாடுகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தை உரிய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டுநிதி இல்லாததன் காரணமாக செலுத்துவதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பசளை முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்காக மாவட்ட செயலகம் மற்றும் கமநல சேவை நிலையங்களிலிருந்து 2015 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 39,751,808 பணம் உரிய நிறுவனத்திற்கு செலுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகளை இனங்கண்டு உரிய நிறுவனங்களுக்கு தீர்த்து வைத்தல் வேண்டும். | 2016 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தில் ரூபா 12.2 மில்லியன் தற்பொழுது விவசாய அமைச்சிற்கு செலுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பணத்தையும் செலுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கிறேன். |
| (ஈ) | ஒப்பந்தத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 2,353,842 மொத்த தொகையான வைப்புக்கள் 02 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலமாக பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | ஒப்பந்தத்தில் குறைபாடுகள் இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து பார்த்ததன் பின்னர் உரிய நிறுத்தி வைத்தல் பணத்தை செலுத்துதல் வேண்டும். | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிசோதனையின் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட சிபார்சுகளின் பிரகாரம் கொடுப்பனவு நடவடிக்கைகள் இடம் பெறுகின்றது என தெரிவிக்கிறேன். |
| (உ) | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் சம்பந்தமாக முறையான பரீட்சிப்புக்களின் பின்னர் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 05 பொது வைப்புக்கணக்குகளில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகள் காலத்தை மிகைத்த ரூபா 44,319,691 மொத்த தொகையான வைப்புக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தயவாக தெரிவித்துக்கொள்கிறேன். |

**2.6 வங்கிக் கணக்குகளின் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி கணக்கிணக்க கூற்றில் உள்ளடக்கப்பட்ட 06 மாத காலங்களை மிகைத்த ரூபா 4,158,109 பெறுமதியான 229 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காசோலைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் பெற்று வருகின்ற மற்றும் செல்கின்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் 03 மாதங்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற 32 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 1,754,679 ஆகும். அவ்வாறே இடமாற்றம் பெற்று வருகைதந்துள்ள 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 336,227 ஆகும். | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பலன்தொடுவ அம்பலான்கணுவ அணைக் கட்டை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 4,506,448 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அச் செயற்பாடு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அமுல்ப்படுத்தப்பட்ட திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) காலி மற்றும் களுத்துறை | விண்ணப்பங்களுக்கான | கருத்துக்கள் |

| | | |
|---|---|---|
| மாவட்ட அலுவலகங்களில் விவசாயிகளால் வயல் காணிகளை ஏனைய செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்துதல் / வயல் காணிகள் இல்லை என்பதாக சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உரிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதில்களை தாமதமின்றி வழங்குதல் வேண்டும். | தெரிவிக்கப்படவில்லை. |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாரராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2016 , 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான அந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. | அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2016 – விவசாய அமைச்சு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>2017 - விவசாய அமைச்சு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யும் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது.<br><br>2018 – 2019.05.23 ஆந் திகதி விவசாய அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மிஹிந்தலை இயந்திரப் பிரிவில் காணப்பட்ட நீர் பவுசர், புல்டோசர், 01 வீல்லோடர் | சொத்துக்களை முறையாக முகாமைத்துவம் | விவசாய அமைச்சினால் வேண்டிக் கொண்டால் மாத்திரம் உரிய இயந்திரங்கள் |

| | | |
|---|---|---|
| என்பவற்றை 1 ½ ஆண்டுகளாக விளைதிறனாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செய்தல் வேண்டும். | வாடகைக்கு வழங்கப்படுகின்றன. மிஹிந்தலை இயந்திரப்பிரிவில் உரிய இயந்திர இயக்குனர்கள் அரசாங்கத்தின் நிரந்தர சேவையாளர்களாக இருப்பதனால் இயந்திரம் செயற்படாதிருந்தாலும் அவர்களுக்கு சம்பளம் செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கிறேன். |

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணை கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டி இருந்த போதிலும் திணைக்களத்தின் 9540 உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் 2018 ஆம் ஆண்டு வரை ஊழியர் பிணை வைப்பதற்கான பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் தற்பொழுது பிணை வைப்பு பதிவேட்டைத் தயாரிக்கும் ஆரம்ப நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2018 ஆம் ஆண்டு வரை ஊழியர் பிணை வைப்பதற்கான பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் தற்பொழுது பிணை வைப்பு பதிவேட்டைத் தயாரிக்கும் ஆரம்ப நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன். |

### 3.5 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில்கள் வழங்கப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 22 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய 03 ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 13 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2019 மே 31 ஆந் திகதி வரை பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய கணிக்கக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 137,585,737 ஆக இருந்தது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - |

### 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) களுத்துறை மாவட்டத்தில் புளத்சிங்ஹல கமநல சேவை நிலையத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் 2017 பெப்ரவரி 15 ஆந் திகதியிலிருந்து மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் நியமனத்தைப் பெற்று அது பற்றி உதவி ஆணையாளர்களுக்கு தெரியப்படுத்தி சேவையிலிருந்து விலகியிருந்தார். அத்திகதியிலிருந்து 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை சம்பளங்களும் படிகளுமாக ரூபா 629,051 செலுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) களுத்துறை மாவட்டத்தில் பதுரெலிய கமநல சேவை நிலையத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் 2017 செப்தெம்பர் 28 ஆந் | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த ஊழியர் நீக்கப்படவில்லை தற்காலிகமாக விடுவிக்கப்பட்டார். அவரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியிலிருந்து 02 ஆண்டுகள் காலத்திற்கு சம்பளமற்ற விடுமுறையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தும் அவருக்கு சம்பளமும் படிகளுமாக ரூபா 321,728 செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து 1999 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சுழற்சி நிதியக் கடன் 2003 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த விசேட இறுங்கு கடன் பணத்திலிருந்து முறையே ரூபா 13,447,002 மற்றும் ரூபா 4,204,610 தொகைகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கடன் பணத்தை விரைவாக அறவிட்டு விவாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இக் கடன் விவசாய அமைச்சினால் 1999 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் எங்கள் திணைக்களத்திற்கு அக்கடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்ட வாறு கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டில் அனுராதபுரம் மாவட்ட அலுவலகத்தில் 5,386 விவசாயிகளுக்கு ரூபா 80,790,000 கடன் வழங்கப்பட்டிருந்தும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதில் ரூபா 31,077,416 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய கடன் பணத்தை விரைவாக அறவிட்டு விவாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | 1998 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரை விவசாயக் கடனுக்காக வழங்கப்பட்ட ரூபா 7,635,172,221 தொகை வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களில் அறவீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதில் ரூபா 1,070,058,452 தொகை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு கமநல சேவை நிலையம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஊ) | 2001 ஆம் ஆண்டின் போது 05 மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 19,131,790 தொகையான விவசாயக் கடன் பணத்தை 06 மாத காலத்திற்குள் அறவீடு செய்ய வேண்டிய போதிலும் அதில் ரூபா 13,855,243 தொகை 18 ஆண்டுகள் கடந்திருந்தும் 2019 மே 31 ஆந் திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை அந்த மாவட்ட அலுவலகங்களிலிருந்து நுவரெலியா மாவட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 10,600,000 தொகையில் 91 சதவீதம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு கமநல சேவை நிலையம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாவட்ட அலுவலகங்களிலிருந்து பதில் கோரப்பட்டுள்ளன. |